
## திராவிடத்தால் வாழ்கிறோம்

1207

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




- வாழ்வோம்

---

திரைக்கதை வசனம்
## கலைஞர் மு.கருணாநிதி

குமரன்தாஸ்

62

# போலிகளின் முகத்திரையைக் கிழிக்கும் ‘மக்கள் ஆணையிட்டால்’

திரையுலகில் மாபெரும் புரட்சி செய்த கலைஞரின் கைவண்ணத்தில் உருவான படைப்புகளின் பன்முகப் பரிமாணங்களை விளக்கும் தொடர்.



படங்கள் உதவி : ஞானம்

“தேர்ந்தெடுக்கப்படுகிறவர்களின் நடவடிக்கைகளுக்கு, தேர்ந்தெடுக்கிற மக்களும் பொறுப்பாளிகள் ஆகிறார்கள்.

தேர்வுக்குரிய குறைந்தபட்ச மதிப்பெண்ணைக் கூட எடுக்காத ஒரு மண்டு மாணவனை ஒரு ஆசிரியர் தேர்வு செய்தால், அந்த மாணவனைவிட, அந்த ஆசிரியர் தகுதிக் குறைவானவர் என்றுதானே பொருள்.

அதேபோலத்தான் தேர்ந்தெடுக்கப்பட்ட நபர்கள், அந்தப் பொறுப்புக்குத் தகுதியற்றவர்கள் என்கிறபோது, தேர்வு செய்த மக்களுக்கும் இழிவு வந்து சேர்கிறது.”

உண்மையில், கலைஞர் ஒரு தீர்க்கதரிசிதான்! எம்.ஜி.ஆர். என்கிற நடிகரின் ஆட்சி குறித்து, கலைஞர் எழுதிய வசனங்கள் இன்று தமிழ்நாட்டை ஆளும் நடிகரின் ஆட்சிக்கும் பொருந்திப்போவது வியப்பல்லவா?

ஆம், ‘மக்கள் ஆணையிட்டால்’ திரைப் படத்தின் தொடக்கத்தில், கலைஞர் திரையில் தோன்றி இவ்வாறு பேசுவார்...

“மக்களுக்காக மக்களால் மக்களுடைய ஆட்சி அமைக்கப்பட வேண்டும். *‘For the people, By the people, of the people’* என்பதே ஜனநாயகத்தின் முனை மழுங்காத இலக்கண மாகும். இந்தக் கருத்தை உணர்த்துகிற வகையில்தான் இதோ இந்தத் திரைக் காவியம். அரசியலிலும் சமுதாயத்திலும் மண்டிக்கிடக்கும் அநாகரிக அடாவடிப் புதர்களுக்கு இடையே சின்னஞ்சிறிய மென்மையான ஒரு குடும்பம். அங்கே வீசும் ஒரு புயல். அந்தப் புயல் நடுவே பூகம்பம் எனப் புறப்படும் ஒரு இலட்சியவாதி அவனை வளைத்து நெரித்து வீழ்த்திடத் துடிக்கும் வஞ்சக நரிகள், வட்டமிடத் துடிக்கும் கழுகு கள் இவற்றை அடையாளம் காட்டி தமிழ் மக்களின் சிந்தனையைத் தூண்டி, நாடு வாழ நலிவு தீர வெளிவருவதே இந்த ‘மக்கள் ஆணையிட்டால்’ படம்” என்று பேசுவார்.

1988-இல் கலைஞர் பேசிய இவ்வசனம் இன்றைய (2026) தமிழக அரசுக்கும் அதனைத் தேர்ந்தெடுத்த தமிழ்நாட்டு மக்களுக்கும் அப்படியே பொருந்துகிறது.

### அரசியல் குத்தல் விமர்சனங்கள்

படத்தின் திறப்புக்காட்சியில்... வழக்கறிஞர் மோகன் (நிழல்கள் ரவி) காரில் வருகிறார். போலீஸ் காரர்கள் Stop.... Stop என்று தடுத்து நிறுத்துகின்றனர்.



**ஒரு காவலர்** : சார், இந்தப் பக்கம் யாரும் போகக்கூடாது என்கிறார்.

**மோகன்** : ஏன் இந்தப் பக்கம் போகக்கூடாது?

**காவலர்** : மந்திரி வாக்கிங் வர்றார்.

**மோகன்** : ம்.... ஏன் சார், மந்திரி இந்தப் பக்கம் வாக்கிங் வர்றாருங்கிறதுக்காக, மனுசங்களே இந்தப் பக்கம் போகக் கூடாதா? நாலு வருசத்துக்கு முன்னாடி, கால்ல செருப்புக்கூட இல்லாம நடந்துபோன ஆளு, இன்னக்கி என்னடான்னா, வாக்கிங் போறதுக்காக, கார்ல வந்து இறங்கிப் போறாரு... ம்... அவருக்கு போலீஸ் பந்தோபஸ்து?

**காவலர்** : நீ ரொம்ப அதிகமா பேசுறே.

**மோகன்** : பேசுறதுக்கும் சேர்த்துதான் காந்தி சுதந்திரமே வாங்கிக் கொடுத்திருக்காரு. இந்த மாதிரி அக்கிரமத்துக்கு சீக்கிரமே ஒரு முடிவு வரத்தான் போகுது... என்கிறார்.

அடுத்த காட்சியில், அமைச்சர் வைரவன் (செந்தாமரை) புரோக்கர் பெருமாள்சாமி (டெல்லி கணேஷ்), சொக்கு (எஸ்.எஸ் சந்திரன்) ஆகியோர் மெரினா கடற்கரையில் நின்று கொண்டு பேசுகிறார்கள்.

**மந்திரி** : இந்த எடமெல்லாம் யாருக்குய்யா சொந்தம்?

**சொக்கு** : சர்க்காருக்கு சொந்தங்க.

**மந்திரி** : ரொம்பச் சரி. இந்த எடத்த வாங்கி ரியல் எஸ்டேட் போட்டு வித்துருவம்யா.

**சொக்கு** : எதுக்குங்க? 99 வருசத்துக்கு லீசுக்கு எடுத்து, பைவ் ஸ்டார் ஹோட்டல் கட்டி ருவோம்.



**மந்திரி** : அப்ப இந்தத் தண்ணிய எல்லாம் என்ன பண்றது?

**சொக்கு** : மண் அள்ளிப் போட்டு மூடிடுவோம்.

**பெருமாள்சாமி** : என்னங்க இது? நடக்குற காரியமா?

**சொக்கு** : எத்தனையோ பேரு வாயில மண் அள்ளிப் போட்டுருக்கோம்; இந்தக் கடல்லயா மண் அள்ளிப் போட முடியாது?

**மந்திரி** : பெருமாள்சாமி, நீ ஒரு அப்ளிகேஷன் போடுய்யா. செகரட்டரி இந்த ஃபைலை சீக்கிரமா மூவ் பண்ணு.

**சொக்கு** : நம்ம கவர்மென்டுல, எந்த ஃபைல் சீக்கிரம் மூவ் ஆகிருக்கு. ஆனா, இது நம்ம ஃபைலு சீக்கிரம் மூவ் பண்ணிருவோம்” என அரசியல் விமர்சனத்தை வைத்திருப்பார்.

அடுத்து, மந்திரி வீட்டில் சொக்கு, பெருமாள்சாமி, மந்திரி ஆகிய மூவரும் உரையாடும் காட்சியில்....

**மந்திரி** : ஏய்யா, போயும் போயும் ஒரு ஓட்டல் சர்வர உயிருக்கு ஆபத்து வர்ற அளவுக்கு இப்படியா அடிக்கிறது?

**பெருமாள்சாமி** : பின்ன, என்ன சார் நம்ம ரோசியைப் போயி, நாயின்னு சொல்லிட்டான் சார்.

**மந்திரி** : அதுக்காக அந்த ஆளை?

**சொக்கு** : அதானே இவர நெறையப்பேரு நாயின்னு கூப்டுறாங்க, அதுக்காக வருத்தப்படுறாரா?

**மந்திரி** : சொக்கு...

**சொக்கு** : ஒரு பேச்சுக்கு சொன்னேன். இவர ‘மாண்புமிகு மந்திரி’ன்னு தானே கூப்பிடுறாங்க அதே மாதிரி இவரு வளர்க்குற நாயையும் ‘மாண்புமிகு நாய்’ன்னு தானே கூப்பிடணும்

**பெருமாள்சாமி** : அதானே! அய்யா ஆஸ்பத்திரியில் இருக்குற சர்வர்கிட்ட போலீஸ் மரண வாக்குமூலம் வாங்கப் போறாங்கலாம். அவன் ஏதாவது ஒளறி வச்சுட்டான்னா? என அந்த வசனம் தொடரும்...

அடுத்து, மந்திரியை அவரது வீட்டில் கதிரவன் (விஜயகாந்த்) சந்தித்து, துப்பாக்கியைக் காட்டி மிரட்டும் காட்சியில்...

**மந்திரி** : ஓ! நீயா? எங்கே வந்தே?

**கதிரவன்** : பன்னீர்க் குளியல், பழரச பானம், கன்னியருடன் கட்டிலறை இதெல்லாம் இல்லன்னா அந்தக் காலத்து மகாராஜாக்களுக்கு தூக்கம் வராதும்பாங்க. இந்தக் காலத்துல உம் மாதிரி மந்திரிகளுக்கும் அதே கஷ்டம்தான் அப்படித்தானே? நான் வந்தது ரொம்ப இடைஞ்சலா இருக்குமே?

**மந்திரி** : ஏய், என்னோட விளையாடாதே. நான் ஏற்கெனவே நெருப்பு.

**கதிரவன்** : ஏய், இந்த நெருப்புதான் ஏழை எளியவங்களோட குடிசையை எரிச்சு கொளுத்தி, கருக்கி, சாம்பலாக்கி, பொசுக்கிப் போட்டுருச்சே!

**மந்திரி** : ம்... மரியாதையா பேசுறா ராஸ்கல்.

**கதிரவன்** : மரியாதை ஒருவழிப்பாதையா இருக்கக்கூடாதுடா மடையா. மரியாதை கொடுத்து மரியாதை வாங்கணும்டா.

**மந்திரி** : ஹ்ஹா... அப்படிங்களா சார். சார் இப்ப எதுக்கு வந்திருக்கீங்கன்னு தெரிஞ்சுக்கலாங்களா?

**கதிரவன்** : கடிச்ச இந்தப் பாம்பே விசத்த உறிஞ்சி எடுக் கணும்னு உத்தரவு போட வந்திருக்கேன் சார்.

**மந்திரி** : ஹ்ஹா.... நீ எனக்கு உத்தரவு போடுறியா? ஒரு நாளைக்கு நான் எத்தனை உத்தரவு போடுறவன் தெரியுமா? என வாதம் நீளும். அவனது மிரட்டலால், குடிசைகளை மீண்டும் மந்திரி கட்டிக்கொடுக்க உத்தரவு போடுவார்.

இவ்வாறு மக்கள் ஆணையிட்டால் திரைப்படத்தின் ஒவ்வொரு காட்சியிலும் அரசியல் விமர்சனங்களும் நையாண்டிகளும், குத்தலும் நிறைந்து காணப்படுகிறது.

இப்படத்தில் நீண்ட வசனங்கள் கிடையாது. அதே சமயம் படம் முழுவதும் கலைஞரின் கூர்மையான அரசியல் வசனங்கள் ஆட்சி யாளரின் ‘தூயவர்’ என்கிற முகத்திரையைக் குத்திக் கிழித்து, ஆட்சியாளரை நிர்வாணமாகத் தொங்கவிடுகிறது. கலைஞரின் ‘மக்கள் ஆணையிட்டால்’ மீண்டும் திரைக்கு வந்தால், பலரது முகத்திரை கிழியும்!

...காட்சி விரியும்

---

## தேர் முன்னோக்கியே நகரட்டும்!

வி.சி.க. துணைப் பொதுச்செயலாளர் வன்னி அரசு அமைச்சராகப் பொறுப்பேற்றதை ஒட்டி, அவரை வாழ்த்திப் பதிவிட்டுள்ள அந்தக் கட்சியின் பொதுச்செயலாளர் சிந்தனைச்செல்வன், கடந்த ஐந்து ஆண்டுக்கால ஆட்சியில் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு மேற்கொண்ட பணிகளையும் நீண்ட பட்டியலிட்டுள்ளார். அவரது பதிவில் இருந்து...

“ஆதிதிராவிடர் பழங்குடியினருக்கு தேசிய ஆணையம் இருப்பதைப் போல, 22.09.2021 அன்று தமிழ்நாடு எஸ்.சி., எஸ்.டி. (SC/ST) மாநில ஆணையம் நிறுவப்பட்டுள்ளது.

– அரசின் அனைத்துத் திட்டங்களுக்கான மொத்த நிதி ஒதுக்கங்களில், எஸ்.சி., எஸ்.டி. (SC/ST) பிரிவினருக்கு உரிய விகிதாச்சார ஒதுக்கீடு கிடைப்பதை, சட்டபூர்வமாய் உறுதி செய்திட (சிறப்பு உட்கூறு திட்டம்) SC/ST Development Action Plan Act 2024 எனும் சட்டம் கொண்டுவரப்பட்டுள்ளது.

– ஒப்பந்தப் பணி மற்றும் கொள்முதல்களில் எஸ்.சி., எஸ்.டி. பிரிவினருக்கு ஒன்றிய அரசு 3% முன்னுரிமை வழங்குவதைப் போல, தமிழ்நாட்டில் அரசு ஒப்பந்தப் பணி மற்றும் கொள்முதல்களில் 5% முன்னுரிமை வழங்கும் வகையில், Tender Transparency Act-இல் திருத்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

– ஆண்டுக்கு 200 கோடியில் அண்ணல் அம்பேத்கர் தொழில் முன்னோடிகள் திட்டம்.

– சர்வதேசப் பல்கலைக்கழகங்களில் நம் மாணவர்கள் பயில, ரூ.36 லட்சம் முதல் ரூ.24 லட்சம் வரை உதவித்தொகை வழங்கும் ‘அண்ணல் அம்பேத்கர் அயலக உயர் கல்வி உதவித் திட்டம்’ சிறப்பான முறையில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

– இந்திய வரலாற்றிலேயே முதன்முறையாகப் பட்டியல், பழங்குடிச் சமூகங்களைச் சார்ந்த தொழில்முனைவோரை ஒருங்கிணைக்கும் வகையில், அவர்களுக்கான தொழில்முனைவோர் மாநாடு (TN BEAT) சென்னை Trade Centre-இல் கடந்த மூன்று ஆண்டுகளாக மிக வெற்றிகரமாக நடந்துவருகிறது.

– கடந்த பல ஆண்டுகளில் தமிழகம் முழுவதும் பதிவான பட்டியல் வகுப்பார் மற்றும் பழங்குடிச் சமூகங்களின் மீதான சாதிய வன்கொடுமை தடுப்புச்சட்ட வழக்குகளின் அடிப்படையில், வன்கொடுமைக்குப் பலியான குடும்பங்களின் வாரிசுதாரர்கள் கண்டறியப்பட்டு, சுமார் 500 பேருக்கு அரசு வேலை வழங்கப்பட்டுள்ளது. வேலை பெற வயது தகுதி இல்லாதோருக்கு, மாதம் ரூ.5,000/- ஓய்வூதியம் வழங்கப்பட்டு வருகிறது’ என நீள்கிறது பட்டியல்.

---

## ஃப்ளாஷ்பேக்



சிற்பி சரவண அபிராம்



### தளபதியின் வாழ்த்துப் பெற்ற படம்!

2002-ஆம் ஆண்டு சிதம்பரத்தில் ஒரு பொதுக்கூட்டத்தில், அன்றைய சென்னை மேயர், தி.மு.க. இளைஞர் அணிச் செயலாளர், இன்றைய கழகத் தலைவர் அவர்கள் கலந்துகொண்டு சிறப்புரை ஆற்றினார்கள். தொலைக்காட்சிகளிலும் பத்திரிகைகளிலும் பார்த்த தலைவர், எங்கள் பகுதிக்கு வருகிறார் என்றறிந்து, அவரை நேரில் சந்திக்க ஆவல் கொண்டு அவரின் உருவத்தை வரைந்து, அவரிடம் கையொப்பம் பெற்றேன். ஓவியத்தைக் கண்டு மிகவும் பாராட்டி, ‘ஓவியக்கலையில் மென்மேலும் வளர்க தம்பி’ என்று எழுதி வாழ்த்தினார். நான் பாதுகாக்கும் பொக்கிஷங்களில், தளபதியின் வாழ்த்துப் பெற்ற இந்தப் படம் என் மனதுக்கு மிகவும் நெருக்கமானது.

**– சிற்பி சரவண அபிராம், திரைப்படக் கலை இயக்குநர், சென்னை.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 82204-51520
மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

---

## மலரும் நினைவுகள் / ஆவணம்

### அண்ணாவை அழைத்த ஜி.டி.நாயுடு!

1937-ஆம் ஆண்டு ‘விடுதலை’ இதழில், அறிஞர் அண்ணா பணியாற்றிக்கொண்டிருந்தபோது, ஜி.டி.நாயுடு அங்கு சென்றுள்ளார். அப்போது அண்ணாவைப் பார்த்து அவர், “எனக்குச் செயலாளராக வந்துவிடுங்கள். தங்கு வதற்கு ஒரு பங்களாவும் காரும் மாதச் சம்பளமாக 250 ரூபாயும் தருகிறேன்” என்று கூறியுள்ளார். ஆனால், அண்ணாவோ அதனை ஏற்க மறுத்துவிட்டார். பெரியாருடன் தொடர்வதையே விரும்பினார்.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 044 - 45849900